சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண். 75/2018

பெயர் திரு.அந்தோனி நாள்.
த/பெ. சீமான் 07.07.2026

<u>வ.வி 5/2026 ல் பகரப்பட்ட உத்தரவுபடி பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம் வாதி அருட்தந்தைக்கு அனுப்பிய கடிதம் என்றால் இல்லை. எனக்கு 65 வயது ஆகின்றது. எனக்கு பூர்வீகம் தச்சூர் கிராமம். தச்சூர் கிராம மக்கள் அனைவரும் ஆந்திர மாநிலத்திலிருந்து குடியேறியவர்கள் என்றால் சரிதான். தச்சூர் கிராமத்தில் உள்ள அனைவரும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சைமன் இறந்து 12 வருடங்கள் ஆகின்றது. எங்கள் ஊரில் உள்ள உறவினர் விவரங்கள் எனக்கு தெரியும். சர்ப்பிரசாப் என்பவரை எனக்கு தெரியும். அவருடைய சகோதரர் மரியநாதன் என்றால் இல்லை. அவர் பங்காளி. எங்கள் ஊரில் ஒவ்வொரு வகையறா மக்களுக்கும் பெயர் உண்டு என்றால் சரிதான்.

2) தும்மா அந்தோனி என்பவரும், காதே சின்னம்மா என்பவரும் வெவ்வேறு வகையறா என்றால் சரிதான். காதே சின்னம்மா, காதே ரோஜா மற்றும் தும்மா லூர்து ஆகியோர் தனித்தனியே வகையறா. தற்போது சாட்சி என்பவர் தும்மா லூர்து கிடையாது என்கிறார். தும்மா லூர்துவின் சகோதரர் சவரி என்றால் எனக்கு தெரியாது. லூர்துதம்மாள் சவரியின் மனைவி என்றால் எனக்கு தெரியாது. லூர்துவின் மற்றோரு சகோதரர் பெயர் சின்னப்பன் என்றால் எனக்கு தெரியாது.

சின்னப்பனின் மகன்கள்தான் சர்ப்பிரசாத் மற்றும் ஆரோக்கியசாமி என்றால் சரிதான். லூர்துவின் தகப்பனார் பெயர் சாலமன் என்றால் எனக்கு தெரியாது. சாலமன் தம்பி பெயர் யாகோப் என்றால் எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.7 ஆனது 15.02.2019 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். அது பற்றிய விவரங்கள் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) பி.த.சா.ஆ.6 பற்றி எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.6 க்கு பிறகு 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் உள்ள சுற்றுசுவரை தாண்டி சென்றால் என்றால் அங்கு சுற்றுசுவர் கிடையாது. தச்சூரில் உள்ள காண்வெண்ட் மற்றும் மருத்துவமனை எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து உள்ளது. சாலையின் கிழக்கே உள்ள காண்வென்டுக்கு இரும்புக்கதவுகள் சுற்றுசுவர் உள்ளது என்றால் அவர்கள் புல எண்ணில் உள்ளது. வழக்குரையில் சாலையின் மேல்புறம் மற்றும் தென்புறம் சுற்றுசுவர் உள்ளது கூறியிருப்பதை என் எதிர் வழக்குரையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதி ஏன் வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் கட்சி செய்யவில்லை. வாதி 30 சென்ட்டுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குரையில் கூறப்பட்டுள்ள 4 எல்லைகள் சரிதான். மேற்கண்ட 4 எல்லைகளும் வழக்கு சொத்தையும் பிரித்து காண்பிக்க அத்துமால் கிடையாது. வழக்கு சொத்தில் நிறையா மரங்களை கன்னிகாஸ்திரிகள் வைத்தார்கள் என்றால் நான்தான்

வைத்தேன். அம்மரங்களை நான் 2015 முதல் வைத்துள்ளேன். மேற்கண்ட விவரங்கள் எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ 6 மற்றும் 7 இந்த மரங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கே கிணறு மற்றும் ஆயில்என்ஜின் உள்ளது என்றால் வழக்கு சொத்தில் உள்ளது.

5) அந்த கிணறு எப்போது எடுக்கப்பட்டது என்றால் நான் வாங்கும்போது சிறிய குட்டையாக இருந்து பின்னர் நான் ஆழப்படுத்தினேன். பி.த.சா.ஆ.5 முதல் 7 ல் மேற்கண்ட குட்டை, கிணறு மற்றும் ஆயில்என்ஜின் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பொருத்து அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் தெரியும். பி.த.சா.ஆ 5 ற்கான மூலப்பத்திரம் பி.த.சா.ஆ.1 என்றால் சரிதான். 1980 க்கு முன்பு செய்யூர் தச்சூர் சாலை மண்சாலையாக இருந்து பின்னர் தார்சாலையாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து செய்யூர் தச்சூர் சாலையில் கிழக்குபுறம் உள்ளது என்றால் சரிதான்.

6) பி.த.சா.ஆ.1ல் கண்ட 75 சென்ட் இருந்து 30 சென்ட் வாங்கினேன் என்றால் இரு ஆவணங்கள் மூலம் ஒரே நபர்கள் மூலம் வாங்கினேன். 37 சென்ட் ஒன்றும் 32 சென்ட் ஒன்றும் வாங்கினேன். பி.த.சா.ஆ.1 யை என்னால் படிக்க இயலாது. பி.த.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள ஜக்குபந்தியில் உள்ள சொத்துகளை தான் இருகிரைய ஆவணங்கள் மூலமாக வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என்னுடைய அலைபேசி எண் தான் உள்ளது. வா.சா. 2 யை விசாரித்த

விவரம் எனக்கு தெரியும். வா.சா.2 க்கு 8 சென்டுக்கு விற்றுள்ளேன். அந்த இடம் தார் சாலைக்கு மேற்கே உள்ளது. அந்த இடத்திற்கு தெற்கே உள்ள இடத்தை செல்வராஜ் என்பவருக்கு 8 சென்ட் விற்றுள்ளேன். மற்றப்பகுதி காலியாக வைத்துள்ளேன். பி.த.சா.ஆ.1ல் கண்ட 4 எல்லைகள் சரிதான்.

7) அதில் கண்ட 75 சென்டில் 69 சென்டை இரண்டு ஆவணங்கள் மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். பி.த.சா.ஆ.5 ல் நான்கு எல்லைகள் குறிப்பிடப்படுள்ளது. பி.த.சா.ஆ 5ல் வடக்கு மற்றும் கிழக்கே கன்னிகாஸ்திரிகள் மடம், மேற்கே சாலை மற்றும் தெற்கே புறம்போக்கும் இடம். பி.த.சா.ஆ.6 மற்றும் 7ல் அதே நான்கு எல்லை தான் குறிப்பிடப்படுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் காண்வென்ட் எவ்வளவு சொத்துகள் வாங்கினார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1978 ல் இருதயராஜ் என்னும் அருட்தந்தை இருந்தார் என்றால் சரிதான்.

8) இருதயராஜ் கிரையம் வாங்கிய ஆவணத்தில் 30 சென்ட் கிரையம் வாங்கியது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ 7ல் கண்ட 4 எல்கைகளில் 1 எல்கை மட்டும் தவறு. வாதி ஆவணங்களை நான் பார்க்கவில்லை. எனவே எதிர்வழக்குரையின் ஆவணங்கள் எவ்வாறு பொய் என்று சொல்கிறேன் என்றால் சர்ப்பிரசாத் என்னிடம் பி.த.சா.ஆ.5ன் போது சொன்னார். மேற்கண்ட விவரங்கள் எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை. வழக்கு சொத்து 8 ஏக்கர் 72 சொத்தில் அடங்கும் என்றால் சரிதான்.

9) பி.த.சா.ஆ.5 ல் கண்ட " லூர்து என்கிற லூர்துரெட்டி அம்மாள் " என்பவர் ஒரே நபர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ 5 ல் மேற்கண்ட நபரின் வாக்காளர் அடையாள அட்டை இணைக்கப்பட்டுள்ளது. பி.த.சா.ஆ.5 ல் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களுக்கும் என்னுடைய கிரையதார்க்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கிரையதார் என்னுடைய பெரியப்பா மகள். நானும் என் பெரியப்பா மகளும் சேர்ந்து திருச்சபையின் சொத்தை ஏமாற்றுவதற்காக பி.த.சா.ஆ.5 யை புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல.

( சாட்சி கேட்ட கேள்விகளுக்கு சரிவர பதில் அளிக்காமல், சைகைகள் செய்து நீதிமன்ற நேரத்தை வீண்னடிப்பதால் சாட்சியம் இத்துடன் நிறுத்தப்படுகிறது)